கொண்டிருக்கிறது. தேவையென அந்த நகராட்சிகள் அல்லது பேரூராட்சிகள் தங்களுடைய கருத்துக்களை, முடிவுகளை அரசாங்கத்திற்குத் தெரிவிக்குமானால், அதையொட்டி மாநிலம் தழுவிய ஒரு கொள்கை முடிவாக அரசு எடுத்து தீவிரப்படுத்துவதற்கு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலக்கோட்டையில் ஊற்று வேலை

*116—(*வினா எண் 9002)* **திரு. அ. பாலுசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டையில் கமலாபுரம் ஜம்புதிரியம்மன் ஊற்று வேலை ஆரம்பிக்கப்பட உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரமென்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : இப்பணி நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஜம்புத்துரைக்கோட்டை ஊராட்சியில் 1985-86ம் நிதியாண்டில் தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, 21-1-1987 அன்று முடிக்கப்பட்டுவிட்டது.

திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை பொதுப் பணித் துறை ஆய்வுத் திட்டத்தின் கீழ் எடுத்து வேலை செய்வதாக இருந்தது. ஆனால் உள்ளாட்சித் துறையின் மூலமாக குறைந்த தொகையில் வேலை பார்த்து சரியாக முடிக்கப்படாத காரணத்தால், அதை மீண்டும் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் சுமார் 24,000 ரூபாய்க்கு மேல் செலவழித்து அது நிறைவேற்றப்பட்டிருப்பதாகக் குறிப்புகள் இங்கே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற தகவலின்படி அதிலே ஏதாவது குறையாக இருக்குமானால், அரசு பரிசீலித்து அதைத் திருத்துவதற்கும் அல்லது பாக்கி இருந்தால் முடிப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்து நன்கு விரிவாக வேலை செய்வதற்குப் பொதுப் பணித் துறைக்கு மாற்றம் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1987 நவம்பர் 16]

மாண்புமிகு ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, திட்டம் நிறைவேறவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்களா? அல்லது பொதுப் பணித் துறைக்கு ஒதுக்கி, அதுதான் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்புகிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை அரசைப் பொறுத்தவரை, எந்தத் துறைக்கு ஒதுக்குவது என்பது முக்கியம் இல்லை. மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். ஆகவே, ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நடைபெறவேண்டிய திட்டங்கள் என்றால், அவை ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாகத்தான் நிறைவேற்றப்படும். பொதுப் பணித் துறைக்கு மாற்றினால்தான் சிறப்பாக நடக்கும் என்று அரசு கருதினால், பொதுப் பணித் துறைக்கு மாற்றும்.

அண்ணா சாலையில் மாற்று வழிப் பாதை

117—(*வினா எண். 12161) திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க மாற்றுப் வழிப்பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னை அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மாற்று வழிப்பாதை அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், இந்த சாலையில் நெரிசலை ஓரளவு குறைக்க டாம்ஸ் சாலையையும், பென்னி சாலையையும் இணைக்கும் இணைப்புச் சாலையைச் செப்பனிடும் பணியை சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள்தோறும் பெருகிவருகின்ற போக்குவரத்து நெரிசலைப் பார்க்கும்போது, இன்னும் 10 ஆண்டுக் காலம் கழித்துப் பார்த்தால், சென்னை மாநகரத்தில் நடக்கக்கூட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடுமோ என்கின்ற அச்சம் உள்ளது. இப்போது, ஒரு இடத்தை அடைவதற்கு ½ மணி நேரமாகும் என்று ஒரு இலக்கை வைத்துக்கொண்டு பயணம் சென்றால், அந்த இடத்தைச் சென்றடைவதற்கு ஒரு மணி நேரம் ஆகிவிடுகிறது. இதை கவனத்தில் கொண்டு, சென்னை மாநகரத்தினுடைய போக்குவரத்து நெரிசல்களைத் தடுக்க, மாற்றுத் திட்டத்தினைத் தயாரிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.